# Flora Textiles Limited

TIN No. : 33521881460
CST No. : 629174 Dt.11.3.96
CIN No. : L17111TZ1993PLC004290

மக்கள் குரல் 11-8-2021

# புளோரா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்

CIN: L17111TZ1996PLC004290
பதிவு அலுவலகம்: 23, பாரதி பார்க் சாலை, கோவை 641043 தொலைபேசி: 0422 2447395
மின்னஞ்சல்: floratex1@gmail.com வலைதளம்: www.floratextiles.in

## 28வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல்

அன்புள்ள உறுப்பினர்களே,

ஜூன் 30, 2021 தேதியிட்ட வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வணிகத்தை பரிவர்த்தனை செய்வதற்காக நிறுவனத்தின் 28வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) செவ்வாய்க்கிழமை, 31 ஆகஸ்ட் 2021 மாலை 04.00 மணியளவில் (இந்திய நேரப்படி) காணொலி காட்சி (VC)/பிற ஒலி ஒளி சாதனங்கள் (OAVM) மூலம் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

06 ஆகஸ்ட் 2021 அன்று கம்பெனியில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்களுக்கு, கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் 5 மே 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 20/2020, 8 ஏப்ரல் 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020, 13 ஏப்ரல் 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 17/2020 (''எம்சிஏ சுற்றறிக்கைகள்'') மற்றும் 12 மே 2020 தேதியிட்ட செக்யூரிடீஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (செபி) சுற்றறிக்கையின்படி, நிறுவனம்/டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு/ஆண்டறிக்கை ஆகியவை அனுப்பப்பட்டுள்ளது.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, விளக்க அறிக்கை மற்றும் 2020–21 நிதி ஆண்டுக்கான ஆண்டறிக்கை ஆகியவை கம்பெனியின் வலைதளம் www.floratextiles.in மற்றும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்படும் ஸ்டாக் எக்சேஞ் வலைதளம் அதாவது பம்பாய் ஸ்டாக் எக்சேஞ் www.bseindia.com மற்றும் கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் வலைதளம்[KFIN] https://evoting.kfintech.comல் கிடைக்கும்.

VC/OAVM வசதி மூலம் மட்டுமே உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் சேருவதற்கான வழிமுறைகள் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், நிறுவனங்கள் சட்டம், 2013 ன் பிரிவு 103 ன் கீழ் கோரத்தை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 108, அவ்வப்போது திருத்தப்பட்ட நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20, செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44ன்படி, கேபின்–ஆல் அளிக்கப்படும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறையை உபயோகித்து வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ள அனைத்து தீர்மானங்களின் மீதும் வாக்களிக்கும் வசதி உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிறது. கூடுதலாக, வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது மின்னணு வாக்குப்பதிவு ("மின்னணு வாக்குப்பதிவு") முறை மூலம் வாக்களிக்கும் வசதியை நிறுவனம் வழங்குகிறது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/ மின்னணு வாக்குப்பதிவுக்கான விரிவான நடைமுறை வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு, உறுப்பினர்கள் https://evoting.kfintech.com என்ற வலைதளத்தையும் பார்வையிடலாம்.

நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் வாக்களிக்கும் செயல்முறையை ஆய்வு செய்ய நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு, திரு. A.C. சரவண், பிராக்டிசிங் நிறுவன செயலாளர், கோயமுத்தூர் அவர்களை ஆய்வாளராக நியமித்துள்ளது.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க அச்சிடப்பட்ட வழிமுறைகளை கவனமாக படிக்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உறுப்பினர்கள் பின்வருவனவற்றைக் கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

| | | |
|---|---|---|
| 1 | அறிவிப்பு/ஆண்டறிக்கை அனுப்பி முடிக்கப்பட்ட தேதி | 10 ஆகஸ்ட் 2021 |
| 2 | தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு துவக்கும் தேதி மற்றும் நேரம் | சனிக்கிழமை, 28 ஆகஸ்ட் 2021 காலை 10.00 மணி (இந்திய நேரப்படி) |
| 3 | தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடிவுறும் தேதி மற்றும் [illegible] | திங்கட்கிழமை, 30 ஆகஸ்ட் 2021 மாலை 5.00 மணி (இந்திய நேரப்படி) |

TRINITY MIRROR

WEDNESDAY 11-8-2021

# FLORA TEXTILES LIMITED